## தேயிலை சக்தி நிதியத்தின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான அறிக்கை - 2019

தேயிலை சக்தி நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது கண்காணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல் தொடர்பில் முகாமைத்துவத்தினதும் ஆளுகைக்குட்பட்ட தரப்பினரினதும் பொறுப்புகள்

2018 இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம், கணக்காய்வுக்கு உட்படுத்தப்படும் ஒவ்வொரு நிறுவனத்தினாலும் அந்த நிறுவனம் தொடர்பான வருடாந்த, கால ரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பில் உரிய முறையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்பட வேண்டும். அந்த அதிகாரச்சட்டத்தின் 16(2) பிரிவின் பிரகாரம், கணக்காய்வுக்கு உட்படுத்தப்படும் ஒவ்வொரு நிறுவனம் தொடர்பிலான வருடாந்த நிதிக்கூற்றுக்கள், விதிகளின் மூலம் காண்பிக்கப்படக்கூடிய வகையில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியினுள் அந்த நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கைகளுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அந்த அதிகாரச்சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம், வருடாந்த அறிக்கைகள் மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் தேவையான காலத்தினுள் தயாரிக்கப்படுகின்றமை தொடர்பில் சான்றுபடுத்தப்பட வேண்டியதுடன், அதற்கு மேலதிகமாக கணக்காய்விற்கு உட்படுத்தப்படும் நிறுவனத்திற்குரிய வருடாந்த அறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்புடன் செயற்பட வேண்டும். அவ்வாறான போதிலும், 2003 யூன் 02ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் மற்றும் 2004 பெப்ரவரி 24ஆந் திகதிய 01/2004ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம், கணக்காண்டு நிறைவடைந்து 60 நாட்களினுள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2016, 2017, 2018 மற்றும் 2019ஆம் ஆண்டுகளுக்குரிய நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கையின் திகதி வரையிலும் கணக்காய்விற்காக முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 2. கணக்காய்வு அவதானிப்புகள்

### 2.1 கணக்கு அறிக்கைகள் மற்றும் பதிவேடுகளை பேணுதல்

நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியாக முன்னெடுத்திருந்த போதிலும், மீளாய்வாண்டிற்குரிய பேரேட்டுக் கணக்குகள் மற்றும் பதிவேடுகள் நிறைவுசெய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2 சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் நிலவுகை

நிதியத்தினால் இறுதியாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட 2015 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

| விபரம் | பெறுமதி<br>(ரூபா) |
|---|---|
| **சொத்துக்கள்** | |
| நடைமுறையல்லாச் சொத்துக்கள் | 350,332,493 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 346,460,128 |
| **மொத்த சொத்துக்கள்** | **696,792,621** |

**பொறுப்புகள்**

| | |
|---|---|
| உரிமை மூலதனம் | (111,648,540) |
| நடைமுறையல்லா பொறுப்புகள் | 481,088,651 |
| நடைமுறைப் பொறுப்புகள் | 327,352,510 |
| **மொத்த பொறுப்புகள்** | **696,792,621** |

## 2.3 நிதியத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| தேயிலைச் சக்தி நிதியம் தொடர்ச்சியாக நட்டமடைந்திருந்ததுடன், நிதியத்தின் உரித்து மூலதனம் படிப்படியாகக் குறைவடைந்திருந்தது. அதற்கமைய 2011 ஆம் ஆண்டில் ரூபா. 553.04 மில்லியனாக இருந்த உரித்து மூலதனம் 2015 ஆம் ஆண்டில் ரூபா. 111.65 மில்லியனான எதிர்மறையான மூலதனமாக மாற்றமடைந்துள்ளது.<br><br>இந்த நிலைமையின் அடிப்படையில் இலக்கம் அமப/16/1224/726/015-I கொண்ட 2016 ஜூலை 13 ஆம் திகதியிலான அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் தேயிலைச் சக்தி நிதியத்தின் பணிப்பாளர் சபையின் நடவடிக்கைகள் அத்தினம் தொடக்கம் இடைநிறுத்தப்பட்டு அதன் நடவடிக்கைகள் பெருந்தோட்டத் கைத்தொழில் அமைச்சின் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்ட 09 பிரேரணைகளைக் கொண்ட வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டு நிதியத்தினை மீளமைப்புச் செய்வதற்கான அனுமதியை வழங்கியிருந்தது. தொழிற்சாலைகளைக் குத்தகைக்கு வழங்குவதன் மூலம் பெறப்படும் வருமானத்தில் பங்கு உரிமையாளர்களுக்கு | குத்தகை மற்றும் முகாமைத்துவ வருமானம் எதிர்பார்க்கப்பட்ட வகையில் கிடைக்கப்பெறாத காரணத்தினால் நிறுவனத்தினை மீள் கட்டமைப்பு செய்யப்பட்ட நோக்கமானது எதிர்பார்க்கப்பட்ட கால எல்லைக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்கு முடியாதிருந்துள்ளது.<br><br>எவ்வாறிருப்பினும் இது வரையிலும் ரூபா. 135 மில்லியன்கள் நலன்புரி காப்புறுதி நிதியத்தினைக் கட்டி எழுப்புவதற்கு குத்தகை மற்றும் முகாமைத்துவ வருமானத்தின் மூலம் ரூபா. 95 மில்லியன் அளவிலான தொகை நிலையான சேமிப்புக்களில் முதலீடு செய்யப்பட்டு குறித்த நிதியம் கட்டி எழுப்பப்பட்டு வருவதோடு, எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை நோக்கி அடைவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் பங்கு உரிமையாளர்களுக்கு நன்மைகளை வழங்குவதற்கும் மற்றும் நலன்புரி காப்புறுதி நிதியத்தினை மீளக் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

நன்மைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கும் மற்றும் நலன்புரி காப்புறுதி நிதியத்தினால் தொழிற்சாலைகளின் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்திய ரூபா. 135 மில்லியன் தொகையினை மீளவும் அந்த நிதியத்திற்குப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் அதன் பின்னர் மீதமாகவுள்ள குத்தகை வருமானத்தினை நிதி அமைச்சிற்கு செலவு வைத்தல் தேயிலைச் சக்தி நிதியத்தினை மீள் கட்டமைப்பு செய்வதன் எதிர்பார்ப்பாகும். அவ்வாறிருக்க எதிர்பார்க்கப்பட்ட வகையில் தொழிற்சாலைகளுக்கான குத்தகை வருமானத்தினைப் பெற்றுக் கொள்ள முடியாதிருந்தமையால் நிதியத்தினை மீள் கட்டமைப்புச் செய்து 4 வருடங்கள் கடந்து விட்ட நிலையிலும் மேற்கூறிய நோக்கத்தினை எட்டுவதற்கு நிதியத்திற்கு முடியாதிருந்துள்ளது.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துத் தெரிவிப்பு | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாண கோவையின் நி.பி.507(2) | ஒவ்வொரு நிதி ஆண்டினதும் மார்ச் மாதம் 17 ஆம் திகதிக்கு முன்னர் கடந்த வருடத்திற்கான பொருள் மேய்மையாய்வு அறிக்கையானது கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டி இருப்பதுடன், 2019 ஆம் ஆண்டிற்கான பொருள் மேய்மையாய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்குகிறேன். தேயிலை சக்தி நிதியத்தின் பிரதான அலுவலகத்தின் சொத்துக்களின் ஒரு பகுதியானது சிறிய தோட்ட அபிவிருத்தி அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதோடு, மற்றைய பகுதியானது பெருந்தோட்ட அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அந்த சொத்துக்கள் உரிய நிறுவனத்தின் மூலம் வருடாந்தம் ஒப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு | நிதியத்திற்குச் சொந்தமான தொழிற்சாலைகளின் நிலையான சொத்துக்கள் வருடாந்தம் மதிப்பிடப்பட்டு அறிக்கையினை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

கணக்காய்வாளரிடம் சொத்துக் கூற்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தேயிலைச் சக்தி நிதியத்திற்குச் சொந்தமான ஏனைய தேயிலைத் தொழிற்சாலைகள் உர களஞ்சியசாலைகள் மற்றும் மாரவில தோட்ட குத்தகையானது முகாமைத்துவ ஒப்பந்தம் மூலம் வெளித் தரப்பினருக்கு பொருட்பட்டியல் ஆவணத்துடன் கையளிக்கப்பட்டுள்ளது. அந்த சொத்தானது தேயிலைச் சக்தி நிதியத்தின் கனிஷ்ட உதவித் தொழிற்சாலை உத்தியோகத்தர் மூலம் ஒப்பாய்வு செய்யப்பட்டதுடன், அதன் பிரதி எதிர்காலத்தில் தங்களுக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

## 2.5 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் ஜனவரி தொடக்கம் ஒக்டோபர் வரையில் இலங்கை வங்கியில் இலக்கம் 2937124 கொண்ட நடைமுறைக் கணக்கில் அண்ணளவாக ரூபா. 13 மில்லியன் தொகை காணப்பட்டதுடன் அந்தக் காலப் பகுதியினுள் குறுகிய கால சேமிப்புகளில் முதலீடு செய்யப்படாத காரணத்தினால் நிதியத்திற்கு வட்டி வருமானம் பெற்றுக் கொள்ளுவதற்கு இருந்த சந்தர்ப்பம் உரித்தற்று போயிருந்தமை அவதானிக்கப்பட்டது. | இணங்குகிறேன். நலன்புரி காப்புறுதி அங்கத்துவத்தைப் பெற்றுக் கொண்டுள்ள அங்கத்தவர்கள் வருடாந்த கேள்வி முறையினைப் பின்பற்றி காப்புறுதி நிறுவனமொன்றைத் தெரிவு செய்து குழு காப்புறுதி மேற்கொள்ளப்படுவதுடன், அது ஒவ்வொரு வருடமும் மார்ச் மாத இறுதியில் மேற்கொள்ளுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதற்காக ரூபா. 13 மில்லியன் அளவான தொகை தேவைப்படுவதோடு, அந்தத் தேவைப்பாட்டிற்காக அந்தத் தொகையினை குறித்த கணக்கில் தடுத்து வைத்திருந்ததுடன், அந்த வருடத்தில் கேள்வி முறையில் ஏற்பட்ட தாமதம் காரணமாக உரிய தொகையினைச் செலுத்துவதில் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. | உரிய அமைச்சரின் மற்றும் நிதி அமைச்சரினதும் அனுமதியைப் பெற்றுக் கொண்டு குறுகிய கால சேமிப்புகளில் முதலீடு செய்தல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**3.1 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) தெனியாய தேயிலைத் தொழிற்சாலை 2016 ஆம் ஆண்டிலும், மாவரல தோட்டம் மற்றும் மாவரல தேயிலைத் தொழிற்சாலை 2017 ஆம் ஆண்டிலும் கிறின்லயின் பர்ஸ்ட் தனியார் நிறுவனத்திற்கு குத்தகை அடிப்படையின் கீழ் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அந்தக் குத்தகைச் சொத்துக்களுக்காக 2017 ஆம் ஆண்டு தொடக்கம் அறவிடப்பட வேண்டிய குத்தகைப் பணத் தாமதக் கட்டணமான ரூபா. 100,888,720 தொகையும் மீளாய்வு ஆண்டிற்கான குத்தகைப் பணமான ரூபா.21,469,837 தொகையும் மீளாய்வு ஆண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இணங்குகிறேன். மாரவில தொழிற்சாலை குத்தகை அடிப்படையில் வழங்கும் சந்தர்ப்பத்தில் பாரிய காலமாகத் தேயிலை உற்பத்தி மேற்கொள்ளப்படாது இருந்தமையால் அந்தத் தொழிற்சாலையைத் தேயிலை உற்பத்தி செய்யும் நிலைமையினை ஏற்படுத்துவதற்காக பாரிய நிதியினை முதலீடு செய்ய வேண்டியிருந்தது. எவ்வாறு இருப்பினும் இது வரையிலும் தொழிற்சாலை தேயிலை உற்பத்தி நிலைமைக்கு கொண்டு வரப்பட்டு இருப்பினும் இது வரையிலும் குத்தகைதாரர் தேயிலை உற்பத்தி நடவடிக்கை ஆரம்பித்திருக்கவில்லை. இந்த நிலைமையின் கீழ் நிலுவை குத்தகைப் பணம் தொடர்பில் தொடர்ந்தும் உரிய குத்தகைதாரருடன் கலந்துரையாடப்பட்டு வந்துள்ளது. தெனியாய தொழிற்சாலையில் முழுமையான கொள்ளளவையும் செயற்படுத்துவதற்காக இந்தப் பிரதேசத்தில் போதுமான அளவு கொழுந்து கிடைக்காததால், வரிப் பணத் தொகையினை மீளாய்வு செய்து கொடுக்குமாறு பல்வேறு சந்தர்ப்பங்களில் கேட்கப்பட்டிருந்தது. அது தொடர்பில் விசேட அறிவினைக் கொண்ட பிற நிறுவனங்களின் பங்களிப்புடன் கூடிய குழுவின் மூலம் ஆய்வு செய்யப்பட்டு அறிக்கையினைப் பெற்றுக் கொண்டு மேலதிக நடவடிக்கை மேற்கொள்ளுவதற்கு இது வரையிலும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மாரவில தோட்ட குத்தகைக்கு எடுப்பவரால் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் ஏற்பட்ட வறட்சி நிலை காரணமாக பாரிய பயிர்ச் செய்கைத் தொகையானது பாதிப்படைந்ததும் மற்றும் அந்த காணியின் ஊடாக நிர்மாணிக்கப்பட்ட புதிய பாதையின் காரணமாக நிலுவை குத்தகைப் பணத்தினைச் செலுத்துவதற்கு நிவாரணம் கேட்கப்பட்டுள்ளது. குறித்த விடயம் | குத்தகை ஒப்பந்தத்தின் நிதியின் பிரகாரம் தாமதமின்றி நிலுவை குத்தகைத் தவணைப் பணம் அறவிடப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | தொடர்பில் மீளாய்வு செய்யப்பட்டதன் பின்னர் அது தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | |
| (ஆ)கொத்மலை தேயிலைச் சக்தித் தொழிற்சாலையின் முகாமைத்துவமானது 2017 ஆம் ஆண்டு தொடக்கம் ரயிகம் பிளான்டேஷன் தனியார் நிறுவனத்திற்குக் குத்தகை அடிப்படையில் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிறுவனத்தினால் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் ரூபா. 63,945,450 குத்தகைப் பணமும் மற்றும் தாமதக் கட்டணமும் அறவிடப்பட வேண்டி இருந்த போதிலும் மீளாய்வு ஆண்டின் இறுதி வரையிலும் அந்தத் தொகையானது அறவிடப்பட்டு இருக்கவில்லை. | இணங்குகிறேன்.<br>தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகள் தொடர்ச்சியாக நடாத்திச் செல்லுவதற்கு முகாமைத்துவக் கொள்வனவாளர் தவறியிருந்த காரணத்தினால், தொழிற்சாலைக்கான போதியளவு கொழுந்தினைப் பெற்றுக் கொள்ளுவது சிக்கலாக உள்ளதுடன், தொழிற்சாலையின் முகாமைத்துவக் கட்டணத் தொகை தொழிற்சாலையின் கொள்ளளவின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதனால் அதிகளவு பெறுமதியைக் கொண்டுள்ளது. இந்த நிலைமையின் கீழ் தொழிற்சாலையினை நடாத்திச் செல்வதற்கு எதிர்பார்க்கப்படும் முறை தொடர்பில் முகாமைத்துவ கொள்வனவாளர்களின் யோசனைகளைப் பெற்றுக் கொண்டு அதற்கேற்ப மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. | குத்தகை ஒப்பந்த நிதி பிரகாரம் தாமதமின்றி நிலுவை குத்தகைத் தவணைப் பணம் அறவிடப்படல் வேண்டும். |
| (இ)2017 ஆம் ஆண்டில் நிதியானது ரயிகம் பிளான்டேஷன் நிறுவனத்துடன் ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி மகாவலி தேயிலை சக்தி தொழிற்சாலையின் முகாமைத்துவம் அந்த நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் தேயிலைக் கொழுந்து வழங்குவதிலுள்ள சிரமம் மற்றும் வருமானத்தினுள் செலவினை செய்து கொள்ள முடியாதிருத்தல் போன்ற காரணங்களின் அடிப்படையில் 2018 ஜுன் மாதம் 14 ஆம் திகதி தொழிற்சாலையினை மீளவும் தேயிலை சக்தி நிதியத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவ்வாறு இருக்க மகாவலி தேயிலைத் தொழிற்சாலைக்கு 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்காக ரூபா. 5,327,950 குத்தகைப் பணமாகவும் மற்றும் தாமதக் | இணங்குகிறேன்.<br>இந்தத் தொழிற்சாலை இது வரையிலும் தேயிலைச் சக்தி நிதியத்திற்கு மீளவும் பெறப்பட்டு புதிய கொள்வனவாளரிடம் முகாமைத்துவம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நிலுவை முகாமைத்துவக் கட்டணம் காணப்படும் குத்தகைக்காரரிடம் இருந்து தொழிற்சாலையைப் பெற்றுக் கொள்ளுகையில் அவர்களினால் இடப்பட்டிருந்த பாதுகாப்புச் சேமிப்புத் தொகையினை நிலுவை முகாமைத்துவ கட்டணத்திற்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் ரூபா.2,907,000 தொகையினை நிலுவைத் தொகையிலிருந்து அறவிடப்பட்டிருந்தது. | குத்தகை ஒப்பந்த நிதி பிரகாரம் தாமதமின்றி நிலுவை குத்தகைத் தவணையினை அறவிடல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கட்டணமாக ரூபா.8,313,293 ஆகவும் மொத்தம் ரூபா.13,691,243 தேயிலை சக்தி நிதியத்திற்கு அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | நிதியத்திற்குச் சொந்தமான வலஹன்துவ தேயிலைத் தொழிற்சாலை 2017 ஜூன் 19 ஆம் திகதி மெல்மான் தனியார் நிறுவனத்திற்கு குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் வலஹன்துவ தேயிலைத் தொழிற்சாலை அமைந்துள்ள காணியில் காணப்படும் முகாமையாளரின் பங்களா அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்தின் மூலம் பயன்படுத்தப்பட்டு வருவதனால் அதனைக் குத்தகைக் கொள்வனவுத் தரப்பினருக்கு வழங்க முடியாது உள்ளது. தொழிற்சாலைக்கு எதிர்பார்க்கப்பட்ட முதலீட்டினை மேற்கொள்வதற்கு அந்த முகாமையாளரின் பங்களாவும் தேவை எனக் குத்தகைக் கொள்வனவுத் தரப்பினரால் தெரிவிக்கப்பட்ட காரணத்தினால் 2018 ஜூன் 01 ஆம் திகதி தொழிற்சாலை மீளவும் நிதியத்திடம் மீளப் பெறப்பட்டிருந்தது. மீளாய்வு ஆண்டில் அந்தக் குத்தகை ஒப்பந்தத்தைச் செல்லுபடியற்றதாக்கி வேறு தரப்பினருக்கு அந்தத் தொழிற்சாலையை குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கு மெல்மான் தனியார் நிறுவனத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொழிற்சாலைக் குத்தகை மற்றும் தாமதக் கட்டணமான ரூபா. 13,987,200 அறவிடப்பட்டிருக்கவில்லை. | இணங்குகிறேன்.<br>இந்தத் தொழிற்சாலை மெல்மான் தனியார் நிறுவனத்திடமிருந்து மீளவும் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பத்தில் குறித்த நிறுவனத்தினால் தொழிற்சாலையின் பாதுகாப்பு வைப்புத் தொகையினை நிலுவை முகாமைத்துவக் கட்டணத்திற்காக தடுத்து வைக்கப்பட்டிருப்பதுடன், அதன் மூலம் ரூபா. 4,230,000 தொகை அறவிடப்பட்டுள்ளது. | குத்தகை ஒப்பந்த நிதி பிரகாரம் சட்ட ரீதியான நடவடிக்கைகளை உடனடியாக நிறைவேற்றி நிலுவைத் தொகையினை அறவிடல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (உ)ரயிகம் கோரளை தேயிலை சக்தி தொழிற்சாலை திக்ஹேன சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்திச்சபைக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் குத்தகை ஒப்பந்தத்தின் 2 ஆவது நிபந்தனையின் பிரகாரம் 6 மாதத்திற்கான ரூபா. 1,500,000 ஆன குத்தகைக் கூலியினை மீளச் செலுத்தும் வைப்பாக குத்தகைக் கொள்வனவுத் தரப்பினரால் குத்தகை வழங்கும் தரப்பினருக்கு செலுத்தப்பட வேண்டி இருப்பினும் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் கணக்காய்வுத் திகதி வரையிலுமே அந்தத் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இந்தத் தொழிற்சாலைக்கு 2018 ஆம் ஆண்டு தொடக்கம் ரூபா. 5,156,640 குத்தகைத் தவணையும் தேயிலை சக்தி நிதியத்திற்கு அறவிடப்பட வேண்டி இருப்பினும் மீளாய்வு ஆண்டு இறுதி வரையிலும் அந்தத் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | இது வரையிலும் அந்தத் தொழிற்சாலை மீளவும் தேயிலை சக்தி நிதியத்திடம் பெற்றுக் கொண்டு ரயிகம் சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி சங்கத்திற்குப் புதிய முகாமைத்துவத்தை ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. திக்ஹேன சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி சங்கத்தினால் தொழிற்சாலை குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த காலப் பகுதிக்கு உரியதான நிலுவைக் கொழுந்து தொகையினை 05 வருடங்களுக்குள் செலுத்துவதற்கு புதிய முகாமைத்துவக் கொள்வனவுத் தரப்பினரான ரயிகம் சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்திச் சங்கம் இணக்கப்பட்டிருந்ததுடன், இந்த நிலுவைக் கொழுந்துப் பணத்தினுள் அடங்கியுள்ள திக்ஹேன சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி சங்கத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவைக் கொழுந்துப் பணத்தில், திக்ஹேன சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்திச் சங்கத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவைக் குத்தகைப் பணத்தினை குறைத்துக் கொண்டு தேயிலைத் சக்தி நிலையத்திற்கு நேரடியாகச் செலுத்துவதற்கு ரயிகம் சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்திச் சங்கம் மற்றும் திக்ஹேன சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்திச் சங்கம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் இணங்கியிருந்தது. | குத்தகை ஒப்பந்த நிதி பிரகாரம் சட்ட ரீதியான நடவடிக்கைகளை உடனடியாக நிறைவேற்றி நிலுவைத் தொகையினை அறவிடல் வேண்டும். |

**3.2 வேறு அமைப்புகளுக்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| நிதியத்தினை மீள் கட்டமைப்புச் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்ட 2016 ஜூலை 13 ஆம் திகதி இலக்கம் அமப/16/1224/726/015-I கொண்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கு நிதி அமைச்சரின் அவதானிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் நிலையான பதவியணியினரை அமைச்சின் கீழ் இயங்கும் வேறு நிறுவனங்களுக்கு | இணங்குகின்றேன். தேயிலைச் சக்தி நிதியத்திற்குச் சொந்தமான GG-6407 இலக்கம் கொண்ட வாகனத்திற்காக ஓட்டுனர் தங்க வைக்கப்பட்டிருந்ததுடன் சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்ட தேயிலைச் சக்தி நலன்புரி பிரிவின் தேவைப்பாட்டின் அடிப்படையில் அந்த வாகனத்துடன் ஓட்டுனரும் அந்த நிறுவனத்திற்கு | வெளி நிறுவனத்திற்கு விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்ட சம்பளப் பணத்தினை மீள் நிரப்பல் செய்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| விடுவிக்கையில் குறித்த நிறுவனத்தின் விருப்பின் பேரிலும் மற்றும் பதவியணியினரின் சம்பளம் மற்றும் வேதனம் அந்த நிறுவனங்களில் காணப்படும் வரவு செலவு நிதியத்தின் அடிப்படையில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அவ்வாறிருக்க முகாமைத்துவ உதவியாளர் உத்தியோகத்தர் மூவர் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்திற்கும், ஓட்டுனர் ஒருவர் சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபைக்கும் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் 2018 ஆம் ஆண்டில் அந்த உத்தியோகத்தர்களுக்காக சம்பளமாக ரூபா. 1,459,614 உம் மற்றும் 2019 ஆம் ஆண்டில் ரூபா. 1,822,298 உம் நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. | இணைக்கப்பட்டுள்ளனர். குறித்த நிறுவனங்களில் அப்போது காணப்பட்ட சேவைத் தேவைப்பாட்டின் அடிப்படையில் ஏனைய உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டிருந்ததுடன், எதிர்காலத்தில் குறித்த நிறுவனத்துடன் கலந்துரையாடி அது தொடர்பில் மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| நிதியத்தின் தொழிலாளர்களினால் நிதியத்திற்கு எதிராக தொழில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கின் தீர்மானத்திற்கு ஏற்ப 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் தொழிலாளர்களுக்கு வழங்கவதற்கு ஏற்பட்டிருந்த நட்டஈட்டுப் பணம் ரூபா. 37,122,988 ஆகும். அவ்வாறே மீளாய்வு ஆண்டில் தேயிலை சக்தி நிதியத்திற்கு எதிராக தொழில் நீதி மன்றங்களில் 38 வழக்குகளும் மற்றும் உச்ச நீதிமன்றத்தில் 25 வழக்குகளும் மற்றும் நட்ட ஈட்டுத் தொழில் நீதிமன்றத்தில் ஒரு வழக்கும் விசாரிக்கப்பட்டு வருகின்றது. | இணங்குகின்றேன். | பதவியணியினரின் சேவையை முடிவுறுத்துகையில் சுற்றறிக்கை மற்றும் அமைச்சரவைத் தீர்மானங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களித்தகமையும் மற்றும் நல்லாளுகையும்

### 4.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆம் திகதி இலக்கம் 01/2014 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் 4 ஆவது பந்தியின் பிரகாரம் சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கு மற்றும் நிதியத்தினை மீள்கட்டமைப்பு செய்யும் அமைச்சரவைத் தீர்மானத்தின் செயற்பாட்டினை உள்ளடக்கி நீண்டகால நோக்குடன் செயல்நடவடிக்கைத் திட்டமொன்றைத் தயாரித்திருக்க வேண்டி இருப்பினும் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன்.<br>தேயிலை சக்தி நிதியம் அமைச்சரவை மீள்கட்டமைப்பு செயற்பட்டதன் பின்னர் இந்த அமைச்சில் வேறானதொரு பிரிவாக தற்போது செயற்பட்டு வருவதோடு, நிதியத்திற்கான தனியானதொரு கூட்டிணைந்த மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>எதிர் காலத்தில் நிறுவனத்தை நடாத்திச் செல்ல வேண்டிய முறை தொடர்பான பரிந்துரை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அனுமதியினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் கூட்டிணைந்த மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் என்பவற்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய திட்டத்தினைத் தயாரிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 4.2 பாதீடு

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 8(1) ஆம் பிரிவின் பிரகாரம் அரசின் அனைத்து சட்டமயமாக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தினாலும் ஒவ்வொரு நிதி ஆண்டிற்கும் பாதீடொன்று தயாரிக்கப்பட வேண்டும். எனினும் 2017, 2018 மற்றும் 2019 ஆகிய வருடங்களுக்குரிய பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன்.<br>தேயிலை சக்தி நிதியம் தற்போது பெருந்தோட்ட அமைச்சில் வேறானதொரு பிரிவாகச் செயல்படுவதோடு, நிதியத்தைச் செயற்படுத்தத் தேவையான செலவுகள் அமைச்சின் செலவுத் தலைப்பின் கீழ் திட்டமிடப்படுகின்றது. எவ்வாறு இருப்பினும் எதிர்காலத்தில் கிடைக்க வேண்டிய வருமானம் மற்றும் செய்யப்பட வேண்டிய செலவுகள் என்பன மதிப்பிடப்பட்டு வருடாந்த பாதீட்டினை தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கை ஒழுங்கு விதிகளுக்கு அமைய வருடாந்தம் பாதீடு தயாரிக்கப்படல் வேண்டும். |